அ.வ.எண்: 11/2019 நாள்: 17.02.2026

பி.வா.சா.1 – சொர்ணம்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. தாவா வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது மூத்த மகன் துரைராஜ் தாக்கல் செய்துள்ளார். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா சொத்தை எனது மூத்த மகனை கேட்காமல் விற்றுவிட்டேன், அதனால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். என்ன உரிமை உள்ளதாக வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், வாதிக்கு அதில் உரிமை இல்லை, இது பூர்வீக சொத்து இல்லை, எனது கணவர் சம்பாதித்து வாங்கிய சொத்து. தாவா சொத்து எனது பெயரில் எனது கணவரால் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தை தவிர எங்களுக்கு வேற சொத்துக்கள் நிறைய உள்ளதா என்றால் பூர்வீக சொத்து சிறிதளவு உள்ளது. மேற்படி பூர்வீக சொத்துக்களை பாகம் பிரித்து விட்டார்களா என்றால் இல்லை, பாகம் பிரிக்காமல் தான் உள்ளது. எனது கணவர் எப்பொழுது இறந்தார் என்றால் சுமார் 10 அல்லது 20 வருடங்களுக்கு முன்பு இறந்தார்.
2. நான் தற்பொழுது யாருடன் வசித்து வருகிறேன் என்றால் எனது இளைய மகன் அன்புச்செல்வன் உடன் வசித்து வருகிறேன்.

மேற்படி அன்புச்செல்வன் எத்தனை வருடங்களாக உடல் நலம் சரியில்லாமல் உள்ளார் என்றால் சுமார் 10, 12 வருடங்களுக்கு முன்னர் அவருக்கு வாத நோய் ஏற்பட்டது. எனக்கு மொத்தம் எத்தனை பெண் பிள்ளைகள் என்றால் மொத்தம் மூன்று பெண் பிள்ளைகள் மூத்த மகள் இறந்து விட்டார். மேற்படி பெண் பிள்ளைகளுக்கும் தாவா சொத்தில் பங்கு உள்ளது என்றால் சரிதான். நான் தாவா சொத்தை விற்கும்போது மேற்படி பெண் பிள்ளைகளிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் அன்பு செல்வத்திற்கு பங்கு உள்ளதா என்றால் அவரது வைத்திய செலவிற்காகத்தான் நான் தாவா சொத்தை விற்றேன். தாவா செத்தில் எனது மூத்த மகனாகிய வாதிக்கும் பங்கு உள்ளது என்றால் சரிதான்.

3. மூத்த மகனிடமும் நான் தாவா சொத்தை விற்கும் பொழுது கையெழுத்து வாங்கவில்லை என்றால் அவருக்கு தெரிந்தால் விற்க விடமாட்டார் என்பதால் வாங்கவில்லை. எனக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை, எனது திருமணத்திற்கு எத்தனை வருடங்கள் கழித்து எனது மூத்த மகன் பிறந்தார் என்றால் மறுவருடமே பிறந்தார். எனக்கு தற்பொழுது என்ன வயதாகிறது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்து எனது சுய சம்பாத்திய சொத்து இல்லாததாலும், அது எனது சீதன சொத்து இல்லாததாலும் அதை என் கணவர் சம்பாதித்து வாங்கியதால் அதில் அனைவருக்கும் பங்கு

உண்டு என்று சொன்னால் சரி இல்லை. தாவா சொத்து எனது சுய சம்பாத்திய சொத்து அல்லது சீதன சொத்து என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. தாவா சொத்தை சுற்றி கம்பி, வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வேலியை யார் அமைத்தது என்றால் எனது கணவர் அமைத்தார். SLT செங்கல் சூளைக்கு எனது பெரிய மகனின் பெயரில்தான் உரிமம் உள்ளது என்றால், அந்த செங்கல் சூலையே எனது கணவர் தான் வைத்திருந்தார். அவர் இறப்பிற்கு பிறகு எனது இரு மகன்களும் பிரித்து எடுத்துக் கொண்டனர். எனது கணவரின் இறப்பிற்கு பிறகு மேற்படி செங்கல் சூளைகக்கான உரிமம் எனது மூத்த மகனின் பெயருக்கு வந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது, மேற்படி செங்கல் சூலையில் தனக்கு கிடைத்த பங்கை இளைய மகன், மூத்த மகனுக்கு எழுதிக் கொடுத்து விட்டார் என்றால் அதை அவர் விற்றுவிட்டார்.

5. மேற்படி செங்கல் சூலையில் எனது இரு மகன்களும் வேலை பார்த்தனர் என்றால் சரியல்ல, அதனை எனது கணவர் மட்டும்தான் வைத்திருந்தார். அவரது இறப்பிற்கு பிறகு இவர்கள் பிரித்துக் கொண்டனர். எனது கணவரின் இறப்பிற்கு முன்பே மேற்படி செங்கல் சூளைக்கான உரிமம் எனது மூத்த மகனின் பெயரில்தான் இருந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்து பொது குடும்ப வருமானத்தில்

இருந்து வாங்கப்பட்ட சொத்து என்பதால் அது எனக்கு தனிப்பட்ட உரிமம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் அனைத்தும் உண்மைக்கு மாறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.02.17 15:48:35 +0530